# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.3 |
| பெயர் | அபுதாஹீர் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | அப்துல் காதர் | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 19th day of November 2024.

(**1** வது அக்ரம் ஜிந்தா, **2** வதுஎதிரி சதாம் உசேன் என்கிற சதாம், **3** ஆம் எதிரி சம்சுதீன் என்கிற சம்சு என்கிற கூளை சம்சு **4** வது எதிரி அனு என்கிற அன்சாத், **5** ஆம் எதிரி ஜாபர் அலி என்கிற ஜாபர், **6** ஆம் எதிரி அப்துல் முனாப் என்கிற முனப் எதிரிகள் ஆஜர். )

முதல் விசாரணை

நான் 31, குழந்தை கவுண்டர் 2 வது வீதி, உக்கடம், கோவை என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலை செய்யப்பட்ட பாரூக் எனது தூரத்து உறவினர். பாரூக்கின் அப்பா ஹமீது சென்னையில் ஒரு ஓட்டலில் மேனேஜராக அப்பொழுது வேலை பார்த்து வந்தார். பாரூக்கின் அம்மா பெயர் நபீசா. அவரது மனைவி பெயர் ரசீதா. அவருக்கு அப்ரீத் மற்றும் ஹனபா என்ற இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். பாரூக் இரும்பு வியாபாரம் செய்து வந்தார். பாரூக்கிடம் டி.வி.எஸ்.50 வாகனம் இருந்தது. பாரூக் கொலை செய்யப்படுவதற்கு முன்பு எந்த இயக்கத்தில் இருந்து வந்தார் என்று எனக்குத் தெரியாது. அவர் என்ன கொள்கை வைத்திருந்தார் என்றும் எனக்குத் தெரியாது.

16-03-2017 அன்று நான் 8.30 மணியிலிருந்து 9 மணிக்குள் வீட்டிற்கு வந்து படுத்துவிட்டேன். சுமார் 10 மணி அளவில் எனக்கு ஒரு அழைப்பு வந்தது. அப்போது பாரூக் இறந்து விட்டதாகவும், அவரது உடல் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் எனக்கு தெரிவிக்கப்பட்டது. உடனே நான் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் எங்களது உறவினர்கள் மற்றும் போலீசார் இருந்தார்கள். எங்களது உறவினர்களான சுலைமான், பசூல் ரகுமானிடம் என்ன விவரம் என்று கேட்டுத் தெரிந்து கொண்டேன். மருத்துவமனையில் போலீசார் நாங்கள் சொல்வதுபோல் எழுதிக் கொடுங்கள் என்று என்னிடம் கூறினார்கள். நானும் எழுதிக் கொடுத்தேன். போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை</u>

16-03-2017 அன்று இரவில் சுமார் 12.30 மணி அளவில் பரூக் இறந்த விவரம் எனக்கு தெரிய வந்தது என்று சொன்னால் சரியல்ல. பரூக் கொலை செய்யப்பட்ட விவரத்தைக் கேள்விப்பட்டவுடன் நான் ஆட்டிடைமனை புல்லுக்காட்டு இடத்திற்கு உடனே சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. கொலையுண்ட பாரூக் எனக்கு தூரத்து உறவினர் என்றால் சரிதான். நல்லது கெட்டதுகளில் நாங்கள் பங்கேற்றுக் கொள்வது வழக்கம். பாரூக் திராவிட விடுதலை கட்சியில் தீவிரமாக இருந்து வந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியும் என்று சொன்னால், சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், அவர் இறை மறுப்பு

கொள்கையை வைத்திருந்த விவரம் எனக்குத் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் அவர் முஸ்லீம் அடிப்படை வாதிகளையும், அல்லாவைப் பற்றியும் கூட முரண்பாடாக பேசி வந்த விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில்தான் அவர் கொலை செய்யப்பட்டார் என்ற விவரமும் எனக்குத் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 16-03-2017 அன்று சுமார் 10 மணி அளவில் தகவல் கேட்டு அன்று இரவே நான் அரசு பொது மருத்துவமனைக்குச் சென்றதாகக் கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. 16-03-2017 அன்று நான் கூறும் 10 மணி அளவில் பரூக் கொலை செய்யப்படவில்லை என்றும், அதனால் அந்த நேரத்தில் அவரது உடலைப் பார்ப்பதற்கு நான் மருத்துவமனைக்கு சென்றிருக்க வாய்ப்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிகள் என்னையும், எனது குடும்பத்தையும் அணுகி கேட்டுக் கொண்டதால் தற்போது அவர்களுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கக் கூடாது என்று எனது குடும்பத்தார் என்னை நிர்பந்தப்படுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. 16-03-2017 அன்று பாரூக் கொலை செய்யப்பட்டவுடன் புல்லுக்காடு ஆட்டிடைமனைக்கு சென்று சடலத்தைப் பார்த்துவிட்டு பரூக்கின் மனைவியுடன் காவல் நிலையத்தில் புகார் அளிக்க நானும் சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நானும், ரசீதாவும் காவல் நிலையத்திற்கு குடும்பத்தினருடன் சென்றபொழுது ரசீதாவால் தான் கைப்பட புகாரை எழுத முடியாத சூழ்நிலையில் அவர் கூற, கூற நான் அந்த புகாரை எழுதினேன் என்று சொன்னால் சரியல்ல. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.1 ல் புகாரில் காணப்படுவது எனது கையொப்பம்தான். அ.த.சா.ஆ.1 புகாரை எழுதியதும் நான்தான். எழுதியது

என்ற இடத்தில் கையொப்பம் செய்ததும் நான்தான். புகாரில் ரசீதாவும் கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால், கையொப்பம் ஆங்கிலத்தில் உள்ளது, அதனால் எனக்குத் தெரியாது. புகார் ஒரு தாளில் இரண்டு பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.த.சா.ஆ.1 புகாரானது 1 மணி அளவில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால், அரசு மருத்துவமனையிலேயே போலீசார் அந்த புகாரை என்னிடமிருந்து எழுதி வாங்கிக் கொண்டார்கள். அதனால் நேரத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. அரசு மருத்துவமனையில் பரூக்கின் உடல் நான் கூறும் நேரத்தில் இல்லாதபோது அந்த நேரத்தில் அவர் கொலை செய்யப்படாதபொழுது அப்போது என்னிடமிருந்து புகார் வாங்கியதாக நான் தவறாகக் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. திறந்த நீதிமன்றத்தில் நான் பொய் சாட்சியம் அளிப்பதால் எனக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொன்னால், நான் பொய் சாட்சியம் அளிக்கவில்லை.

<u>**1,3** மற்றும் **6** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> இல்லை

<u>**2** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> இல்லை

<u>**5** எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> இல்லை

ஒம்/அபுதாஹீர்

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.4 |
| பெயர் | சுலைமான் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | அப்துல் ரசாக் | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 19th day of November 2024.

(**1** வது அக்ரம் ஜிந்தா, **2** வதுஎதிரி சதாம் உசேன் என்கிற சதாம், **3** ஆம் எதிரி சம்சுதீன் என்கிற சம்சு என்கிற கூளை சம்சு **4** வது எதிரி அனு என்கிற அன்சாத், **5** ஆம் எதிரி ஜாபர் அலி என்கிற ஜாபர், **6** ஆம் எதிரி அப்துல் முனாப் என்கிற முனப் எதிரிகள் ஆஜர். )

முதல் விசாரணை

நான் 86, பொன்விழா நகர், இரண்டாவது வீதி, உக்கடம், கோவை என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோவை சாயிபாபாகாலனி எம்.ஜி.ஆர் மார்க்கெட்டில் எஸ்.ஏ.வெஜிடபிள் கடையில் எழுத்தராக பணி செய்து வருகிறேன். 2017 காலகட்டத்தில் பசீல் ரகுமான் என்பவர் என்னுடன் அதே கடையில் வேலை பார்த்து வந்தார். 16-03-2017 அன்று இரவு சுமார் 12 மணிக்குமேல் நான் மேலே குறிப்பிட்ட பசீல் ரகுமான் என்னை தொலைபேசியில் அழைத்து அவருடைய மைத்துனர் புல்லுக்காடு ஆடு அறுக்கும் இடத்தில் கொலை செய்யப்பட்டு கிடப்பதாகவும், அதனால் என்னை உடனே அங்கு வருமாறும் கூறினார். நானும் உடனே அந்த இடத்திற்குச் சென்றேன். நான் பரூக்கின் உடலைப் பார்க்கும்பொழுது கழுத்து பாதி அறுபட்டு பிளந்த நிலையில்

காணப்பட்டது. உடலிலும் பல காயங்கள் இருந்தது. பசூல் ரகுமானிடம் நான் விசாரித்தபொழுது யார் கொலை செய்தார்கள் என்ற விவரம் தெரியவில்லை என்று கூறினார். பின்னர் பி.1 காவல் நிலையத்திற்கு பரூக்கின் மனைவி ரசீதா, மற்றும் அவரது மாமியார், அபுதாகீர் (அ.சா.3) உடன் சென்றதாக கூறினார். வழக்கு பதிவு செய்யச் சென்றதாகக் கூறினார்கள். சம்பவ இடத்தில் நிறைய நபர்கள் இருந்தார்கள். அவர்களுடன் நானும் இருந்தேன். பசீல் ரகுமானும் அங்குதான் இருந்தார். 17-03-2017 அதிகாலை சுமார் 1.40 மணி அளவில் பி.1 காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்தார்கள். அங்கிருந்தவர்கள் இன்ஸ்பெக்டர் வந்திருப்பதாகவும், அவருக்கு ஒத்துழைக்குமாறும் கூறினார்கள். ஆய்வாளர் இறந்தவரின் உறவினர்கள் யார் என்று கேட்க பசீல் ரகுமான் உறவினர் என்று கூறினோம். அவரையும் என்னையும் சாட்சிகளாக இருக்கிறீர்களா என்று கேட்டார்கள். நாங்கள் சரி என்றோம். சம்பவ இடத்தை ஆய்வாளர் பார்வையிட்டு வரைபடம் ஒன்றை தயாரித்து எழுத்து மூலமாக வேறு ஒரு மகசர் ஆவணத்தையும் தயார் செய்தார். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாகும். அந்த பார்வை மகசரில் முதலாவதாக பசூல் ரகுமானும், இரண்டாவதாக நானும் கையொப்பம் செய்துள்ளோம். பார்வை மகசர் தயார் செய்த ஆய்வாளரும் கையொப்பம் செய்துள்ளார். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அதே தேதியில் அதிகாலை 2.30 மணி அளவில் ஒரு கைப்பற்றுதல் மகசரையும் தயார் செய்தார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரில் ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண், பாரூக் உடல் அருகில் கிடந்த ஒரு செல்போன், பரூக்கின் இடது கை விரல் இடுக்குகளில் சிக்சியிருந்த தலைமுடி ஆகியவற்றை கைப்பற்றினார்கள்.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தின் மூலமாகத்தான் மேலே குறிப்பிட்ட கைப்பற்றுதல் நடந்தது. அது அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் வெள்ளைநிற செல்போன்தான் சம்பவ இடத்தில் வைத்து எங்களது முன்னிலையில் கைப்பற்றியதாகவும். அது P.M.O.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ரத்தம் படிந்த மண் மற்றும் ரத்தம் படியாத மண்ணைத்தான் ஆய்வாளர் சம்பவ இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அவைகள் P.M.O.5 மற்றும் P.M.O.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் கைப்பற்றிய தலைமுடியைப் பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியும் ( தலைமுடி ரசாயண பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதால் சாட்சியிடம் காண்பிக்கப்படவில்லை) அதே தேதியில் சுமார் 3.15 மணி அளவில் பரூக்கின் எக்ஸ் எல் இரண்டு சக்கர வாகனத்தை சாவியுடன் எங்களது முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மகசர் மூலமாகத்தான் மேலே குறிப்பிட்ட இருசக்கர வாகனம் சாவியுடன் கைப்பற்றப்பட்டது. அதன் பதிவு எண்.டி.என்.38 ஏ.வி- 5974 ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி நீதிமன்றத்தின் வளாகத்தில் கீழே நிறுத்தப்பட்டிருக்கும் வாகனத்தை நீதிமன்ற வாயிலுக்கு அருகே நின்று பார்த்துவிட்டு அடையாளம் காட்டினார். அந்த வாகனம் ஏற்கனவே P.M.O.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.8 ல் நானும், பசீல் ரகுமானும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளோம். 15-04-2017 அன்று சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் வைத்து என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். சி.பி.சி.ஐ.டி அலுவலகத்திலிருந்து மீண்டும் சம்பவ இடத்திற்கு வந்தோம்.அங்கு வைத்து

சம்பவ இடத்தைப் பார்வையிட்டு ஒரு ஆவணம் தயார் செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் அப்பொழுது சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாகும். அது அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.த.சா.ஆ.9 ல் நானும், பசீல் ரகுமானும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளோம். அந்த இடத்திலேயே வைத்து அவர்கள் வைத்திருந்த லேப்டாப் மூலமாக அ.த.சா.ஆ.9 பிரிண்ட் எடுக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்டது. அதற்கு முன்பு பி.1 காவல் நிலையத்தாரும் எங்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

**1,3** மற்றும் **6** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பொன்விழா நகர் இரண்டாவது வீதி**,** தெற்கு உக்கடம்**,** கோவை எனது விலாசம்தான்**.** எனக்கு போன் வந்ததாகச் சொல்லும் சமயத்தில் நான் வீட்டில்தான் இருந்தேன்**.** எனதுவீட்டிற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே சுமார் **1/2** கி**.**மீ தூரம்தான் இருக்கும்**.** எனது நண்பர் பசீல் ரகுமான் பிலா எஸ்டேட்**,** தெற்கு உக்கடத்தில் இருக்கிறார் என்று சொன்னால் சரிதான்**.** அவர் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் **1/2** கி**.**மீ தூரம் இருக்கும்**.** சம்பவ இடத்திற்கு நான் சென்ற சமயத்தில் போலீசார் அங்கு இருந்தார்களா என்று எனக்கு தற்போது நினைவில்லை**.** நான் சம்பவ இடத்திற்குச் சென்ற சமயத்தில் நல்ல கூட்டம் இருந்தது**.** சுமார் **50** அல்லது **60** பேர்கள் இருந்திருப்பார்கள். நான் சம்பவ இடத்திற்குச் சென்ற சுமார் ஒரு மணிநேரம் கழித்து போலீசார் அங்கு வந்திருக்கலாம். ஆட்டிடை மனை என்பது ஆடுகள் வெட்டும் இடம் என்றால் சரிதான்**.** நான் சென்ற நேரத்தில் அந்த இடத்தில் ஆடுகள் இல்லையா**,** இருந்ததா என்று நான் கவனிக்கவில்லை**.** பரூக் இறந்து கிடந்த இடத்தில் அவர் உடலுக்கு கீழ் ரத்தம் காணப்பட்டது**.** அதைத் தவிர்த்து

வேறு இடங்களில் இல்லை. உடலை திருப்பிப் போட்ட பின்னர்தான் ரத்தம் படிந்த மண் அங்கிருந்து எடுக்கப்பட்டது என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு நினைவில்லை. அந்த இடத்தில் வைத்து ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண் என்ற இரண்டு மாதிரிகள் எடுத்தார்கள். ரத்தம் படிந்த மண்ணை எடுத்து என்னிடம்காண்பித்து ஒரு கவரில் போட்டார்கள். அதை பின்னர் சீல் வைத்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. அதே போன்று ரத்தம் படியாத மண்ணையும் எடுத்து என்னிடம் காண்பித்து கவரில் போட்டார்கள். மடித்து சீல் வைத்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. அந்த இடத்தில் கைப்பற்றிய செல்போன் சாம்சன் செல்போன் ஆகும். செல்போனில் எத்தனை சிம்கார்டுகள் இருந்தது என்று நான் கவனிக்கவில்லை. சடலத்தை புரட்டி எடுத்துத்தான் செல்போனை கைப்பற்றினார்கள். செல்போன் சடலத்தின் முதுகுக்கு கீழ் கிடந்தது. அவைகளை பார்வை மகசரில் எழுதினார்களா என்றால், கைப்பற்றுதல் மகசரில் எழுதினார்கள். பார்வை மகசரில் எழுதினார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. வரைபடத்தில் செல்போன் எங்கு கிடந்தது என்று எழுதினார்களா என்று எனக்கு நினைவில்லை. ஆட்டிடைமனை என்பது காம்பவுண்ட் உள்ள திறந்த வெளிக்குள் கட்டிடம் என்று சொன்னால் சரிதான். காம்பவுண்ட் சுவரில் ஒரு கேட் உள்ளது. கேட்டிற்கு வடக்குப்பார்த்து சடலம் கிடந்தது. கேட்டிலிருந்து சுமார் **10** அல்லது **15** அடிக்குள் சடலம் கிடந்தது. சடலம் கிடந்த இடத்திலிருந்து தெற்கு திசையில் இருசக்கர வாகனம் இருந்தது. இருசக்கர வாகனத்தில் பொருட்கள் வைக்கக்கூடிய பை இருந்தது. செல்போனை கைப்பற்றியது மஜார் காவல் நிலைய அதிகாரிகள், வேறு யாரும் இல்லை. உக்கடம் பைபாஸ் ரோட்டிற்கும் ஆட்டிடைமனைக்கும் இடையே **1/4** கி.மீ தொலைவு இருக்கும். இடதுகை விரல் இடுக்கில் எவ்வளவு முடி இருந்தது என்று எனக்கு

நினைவில்லை. அந்த முடியை கவரில் போட்டு, கயிறு போட்டு கட்டினார்கள். சீல் வைத்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. பார்வை மகசரில் முடி இருந்த விவரத்தை எழுதினார்கள். அதை பசீல் ரகுமான் படித்துப் பார்த்தார். நான் படித்துப் பார்க்கவில்லை. கைப்பற்றுதல் மகசரில் இடதுகை விரல் இடுக்கு என்று எழுதவில்லை என்றால் சரிதான். பசீல் ரகுமான் பரூக்கின் மைத்துனர் ஆவார். நான் சொன்னநேரத்தில் சொன்ன விதத்தில் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், எனது முன்னிலையில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் ஆகியவைகள் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பின்னிட்டும் நான் சம்பவ இடத்திற்குச் செல்லவில்லை என்றும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேலே குறியிடப்பட்ட வழக்கு ஆவணங்கள் பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவைகள் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறியதுபோல் பசீல்ரகுமான் என்னை தொலைபேசியில் அழைக்கவில்லை என்ற சொன்னால் சரியல்ல. எனது செல்போன் எண்ணை புலன் விசாரணை அதிகாரிக்கு கொடுத்துள்ளேன். அந்த எண்ணைத்தான் தற்போதும் நான் பயன்படுத்தி வருகிறேன். பசீல் ரகுமான் போனிலிருந்துதான் என்னை அவர் அழைத்தார் என்ற விவரத்தையும், அவருடைய எண்ணையும் நான் குறிப்பிட்டேன்.

**2** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**(1,3** மற்றும் **6** எதிகரிகளின் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்கிறார்கள்**)**

**5** எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**(1,3** மற்றும் **6** எதிகரிகளின் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்றுக் கொள்கிறார்கள்**)**

மறு விசாரணை இல்லை

ஒம்**/**சுலைமான்**,**

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.